சுருக்கம்

பணியமைப்பு – நெடுஞ்சாலைத் துறை – தமிழ்நாடு நெடுஞ்சாலை பொறியியல் பணிகள் – முதுநிலை வரைதொழில் அலுவலர்கள் பதவி உயர்வில் தலைமை வரைதொழில் அலுவலர்களாகப் பணி நியமனம் செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது

---

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.கே.1) துறை

அரசாணை (டி) எண்.143 நாள்:21.06.2017

ஹேவிளம்பி, ஆனி 7, திருவள்ளுவராண்டு 2048

படிக்கவும்:–

1 அரசாணை (டி) எண்.126, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.கே.1) துறை, நாள் 31.05.2017.

2 நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர், சென்னை – 25 அவர்களின் கடித எண்.156/கமு.1/2017, நாள் 12.06.2017.

---------

ஆணை:-

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2017-2018ஆம் ஆண்டிற்கான தலைமை வரைதொழில் அலுவலர் பதவிக்கு தகுதி பெற்ற 10 முதுநிலை வரைதொழில் அலுவலர்களின் பெயர்கள் அடங்கிய தற்காலிக தேர்ந்தோர் பெயர் பட்டியலுக்கு ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர், அவர்கள் மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தலைமை வரைதொழில் அலுவலர் பதவிக்கான தற்காலிக தேர்ந்தோர் பெயர் பட்டியலில் இடம் பெற்றுள்ள முதுநிலை வரிசை எண் 1, 2 மற்றும் 3ல் இடம் பெற்றுள்ள முதுநிலை வரைதொழில் அலுவலர்களுக்கு, தலைமை வரைதொழில் அலுவலர்களாக பதவி உயர்வு அளிக்கும் கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

3. நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் அவர்களின் கருத்துருவை ஏற்று, மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், இடம் பெற்றுள்ள நெடுஞ்சாலைத் துறையை சார்ந்த, கீழ்காணும் முதுநிலை வரைதொழில் அலுவலர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 விதி 47(1)–ன் கீழ் தற்காலிக அடிப்படையில் பதவி உயர்வு அளிக்கப்பட்டு தனியர்கள் பதவி பொறுப்பேற்கும் நாள் முதல் தலைமை வரைதொழில் அலுவலர்களாக, பணி நியமனம் செய்யப்படுகிறார்கள்.

1. திரு நா.கோவிந்தன்
2. திரு வெ.இராமசாமி
3. திரு வி.இராமநாதன்

4. அரசு கடிதம் எண்.8119/FR-II/1980, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 30–04–1980–ன்படி மேலே பத்தி 3–ல் தலைமை வரைதொழில் அலுவலர்களாக பதவி உயர்வு பெற்ற முதுநிலை வரைதொழில் அலுவலர்களின் ஊதியத்தை நிர்ணயிக்க ஏதுவாக

தனியார்கள் தலைமை வரைதொழில் அலுவலர் பதவியில் நிரந்தர நியமனம் பெறுவதற்கு தேவையான அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்கிறார்கள் என்று சான்றளிக்கப்படுகிறது.

5. நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வரைதொழில் அலுவலர் முதுநிலை நிர்ணயம் தொடர்பான வழக்குகளில் பெறப்படும் ஆணைகள் மற்றும் முதுநிலை வரைதொழில் அலுவலர் பதவியில் பணி மூப்பு வரிசை திருத்தத்திற்கு உட்பட்டு, மேலே பத்தி 3–ல் குறிப்பிடப்பட்டுள்ள பதவி உயர்வு அளிக்கப்படுகிறது.

6. இப்பதவி உயர்வு காரணமாக மட்டும் தனியர்கள் தலைமை வரைதொழில் அலுவலர் பதவி உயர்வில் உரிமை கோர இயலாது. இப்பதவி உயர்வு தற்காலிகமானது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

7. தனியர்களுக்கான பணி நியமன ஆணைகள் நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் அவர்களால் வழங்கப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
தனியர்கள்,
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை – 25 (வழியாக)
முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை –25.
கூடுதல் தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
கோ.எண்.7324/எச்.கே.1/2017
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

N. [signature]
பிரிவு அலுவலர்